ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

திருமால் திருச்சந்நிதி முறையீட்டு

# வருக்கக்கோவை

இஃது

கோயமுத்தூர்ஜில்லா. உடுமலைப்பேட்டையிலிருக்கும்

மகா-ள-ஸ்ரீ வி. முனியப்ப பிள்ளையவர்கள்

மாணாக்கருள் ஒருவராகிய

## தி. வெங்கடராயலு நாயடு

அவர்களாலியற்றப்பட்டு

ஷை பூரிலிருக்கும் மகாகனம்பொருந்திய

பாச்சா சாயபு அவர்கள் என்று பெயர் வழங்கும்

## சைது பக்கர்தீன் சாயபு பகதூர்

அவர்கள் திரவிய சகாயத்தினால்

கோயமுத்தூர்:

“ அப்ஸர்வர் ” அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890 - ௵

ஶ்ரீ

ஸ்ரீராமஜெயம்

திருமால் திருச்சந்நிதி முறையீட்டு

# வருக்கக்கோவை

இஃது

கோயமுத்தூர்ஜில்லா உடுமலைப்பேட்டையிலிருக்கும்

மகா-௱-ஸ்ரீ வி. முனியப்ப பிள்ளையவர்கள்

மாணாக்கருள் ஒருவராகிய

## டீ. வெங்கடராயலு நாயடு

அவர்களாலியற்றப்பட்டு

ஷை யூரிலிருக்கும் மகாகனம்பொருந்திய

பாச்சா சாயபு அவர்கள் என்று பெயர் வழங்கும்

## சைது பக்கர்தீன் சாயபு பகதூர்

அவர்கள் திரவிய சகாயத்தினால்

கோயமுத்தூர்:

" அப்ஸர்வர் " அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890 - ஷு

# சாத்துக் கவிகள்.

தண்டபாணி சுவாமிகளென்றும் திருப்புகழ்ச் சுவாமிகளென்றும்
பெயர் வழங்கும்

ஸ்ரீமத் முருகதாச சுவாமியவர்களா லியற்றப்பட்ட
கட்டளைக் கலித்துறை.

வாணிமின்னுள் வலக்கொங்கை யொப்பாங் தமிழ்வாய் வருக்கம்
பேணியகோவை பெருமாள் பதங்கள்பெற வணங்தான்
வேணியம்மானிட மேவுங்கவுரி வியன்குலத்தோ
ராணிமுத்திற் றிகழ்வேங்கடராயன் மெய்யன்பினனே.

நேரிசை வெண்பா.

சீநிவாசன் புதல்வன் சீர்வேங்கடராயன்
மாநிலமுண்டோன்பதத்தின் வாஞ்சையான்—ஆங்கிறத்து
மங்கையருளால் வணங்ததுதி வாழ்த்துமன்பர்க்
கங்கைகெல்லி யாகுமருள்.

---

உடுமலைப்பேட்டை மகா-ா-ா-ஸ்ரீ
D. S. ஆண்டியப்பபிள்ளை யவர்களாலியற்றப்பட்ட
கட்டளைக் கலிப்பா.

கருக்கக் கோவைகுங் கார்வணச் செங்கணன்
கழற்கு வேங்கட ராஜ னணீதிரு
வருக்கக் கோவையம் மார்ன்மனத் தூன்றிமேல்
வளர்ந்தன் பார்வமகிழ்நட் பிரங்கலா
மருக்கக் கோவைபுட் பம்பிஞ்சு காய்கனி
வாய்ந்தக் கன்னிர சம்முத்தி யீகவே
பெருக்கக் கோவையம் வாணர் பிழைக்கவே
பிறப்பிறப் புப்பிணிப் பசி நீங்கியே.

உடுமலைப்பேட்டை மகா-ா-ா-ஸ்ரீ
பு. ப. அ. முத்துசாமிசெட்டியார் அவர்களாலியற்றப்பட்ட
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

செழிக்குமுத தியிற்பணியில் வடத்தின்மறை யிடத்தில் வளர்
தேவைப் போற்றிப்
பழிக்குமுதப்பிறவி யறுமாதவர்தம் முளம்போலும்
பணிலமுத்தாற்
பிழிக்குமுதம் விரிசெயுடு மலைப்பதி வேங்கடராஜ
பெற்றித் துங்கன்.
மொழிக்குமுத லெழுத்துகளால்வரு வருக்கக்
கோவையொன்று மொழிந்திட்டானே.

இஃது
திருநெல்வேலி ஜில்லா சேற்றூர் சமஸ்தான வித்துவான்
மகா-ா-ா-ஸ்ரீ கந்தசாமிக்கவிராயரவர்களாலியற்றப்பட்ட
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கரும்பாத வரையனவா வென்னுமொழி நுதன்மடவார்
காமன் சந்தப்
பெரும்பாத வரைநிகர்வோ னுயர்மறையோர் கரப்புனலைப்
பெரிது நெஞ்சம்
விரும்பாத வரையணுகு மதிலுடுத்த வுடுமலையூர்
மேவு வோனன்
பரும்பாத வரையொறுக்கு மால்சீநி வாசனெனு
மருமையாளன்
தவன்புரிந்து பெற்றமணி வேங்கடரா யனுமகிபன்
சங்க மேந்து
பவன்குலவுந் திருவடிக்கோ ரெழுத்துவருக் கக்கோவை
பகரக் கண்டே
சிவன்பிள்ளை யும்மலைவாய்ச் சிரலைவா யிருப்பனெனன்னிற்
செகத்துள்ளீர்கா
ணவன்கொள்ளு மிந்நூலின் பெருமைய தென்னுலெடுத்து
நவிறற்பாற்றே.

கோயமுத்தூர் முன்சிபு கோர்ட்டு பிளீடர் மகா-ள-ள-ஸ்ரீ

## சந்திரசேகரம்பிள்ளை யவர்களால்

இயற்றப்பட்ட

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வேங்கடநாதப்புனித னெந்தைதந்தை யைந்தாக்கி
மேலொன் றேற்றித்
திங்கடராப் பிரபந்தஞ் செய்துலகம் புகழுநிலை
செய்த தேய்ப்ப
வேங்கடராயக் குரிசிலெந்தைதந்தை நான்காக்கித்
துவமேலேற்றிப்
பாங்கடரார் மணிவருக்கக் கோவையொன்று விண்டுவின்மேற்
பணித்திட்டானே.

---

கோயமுத்தூரிலிருக்கும் குணியமுத்தூர் கர்ணம் மகா-ள-ள-ஸ்ரீ

## கருப்பணபிள்ளை யவர்களாலியற்றப்பட்ட

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருமகளுக் கரங்கவடன் மருமகளுக் கிலங்கிழுஞ்
செயமா மாதுக்
கருணைமதரு பாசரையா யமருமுடு மலைப்பேட்டை
யரிவை நோற்ற
பெரியதவச் சீனிவா சனுக்கினிய சேயாகப்
பிறந்து மாய
அரியவடிக் கினவருக்கக் கோவையை வேங்கடராய
னுதவினனே.

---

உடுமலைப்பேட்டையிலிருக்கும் மகா-௱-௱-ஸ்ரீ
**வங்கிபுரம், கி. திருமலைசுவாமி அய்யங்காரவர்களால்**
இயற்றப்பட்ட
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கமலையம் பகமடவார் நிலம்பொனவா வினைவெறுத்தங்
கருத்தை வேருய்க்
கொமலையம் பரமபத வழிகண்டமெனை வெவருங்
குயிற்றி யேற்ற
நெடிமலையம் பரங்கண் வளரச் சுதன்றூட் கொருவருக்க
நிகழ்மாக் கோவை
யுமலையம் பதியுறைவேங் கடராயனுரைத்தினிசை
யுற்றுன் மன்னே.

---

வடபதி ஸ்ரீசைலபீடம் தத்தாத்திரேய யோகீஸ்வராதீனம்
ஸ்ரீலஸ்ரீ சிவராம தேசிக சுவாமிகள் மாணுக்கருளொருவராகிய
கருவூர்
**மகா-௱-ஸ்ரீ தி. அப்பாவு பிள்ளையவர்களாலியற்றப்பட்ட**
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சித்தொருமூன் றுஞ்சகள.வழிபாட் டாற்சாருபச்
சிவத்தை யுற்றுப்
பெத்தமில்கண் ணொளிகனலி யொளிபுரயச் சேடமதாய்ப்
பிறங்க நாளு
முத்தமநற் பாமுதலை யுருச்சகளி கரித்தாங்க
மொடுநூற் றெட்டாய்த்
துத்தியஞ்சார் திருப்பதிவாழ் திருப்பதியா னையைந்தாங்
துரிய மான்முன் (1)
நாரணனே பிரமமென நாடிமெத் துவேஷிமுத
னவிலீரைந்து
காரணங்கொள் வைணவரு மறுசமயத்தவருமொரு
கருத்தாயென்றும்

பூரணமார் திருக்கோச மந்திரமோ டொருமூலம்
பொருத்திங் யாசித்
தாரணமைம் பூசைபுரிந் தாதரவா லெடுத்தோதி
யருளார்ந்தோங்க (2)
உத்தமமோ டுரைதரும் பத்திமைகோக்க ளொருங்குதொகுத்
தொரு நூலாக்க்
கொத்துசெய்து திருமாலின் திருவருக்கக் கோவையெனக்
கோத்திட்டானல்
வித்தகர்வித் துவசம்பன் னரும்புகழ மகிழவருண்
மேய ஞானச்
சித்தனுடு மலைப்பதிவேங் கடராஜ நாயுடெனுஞ்
சீரியோனே. (3)

---

கோயமுத்தூர் ஜில்லா பொள்ளாச்சித் தாலூக்கா வேட்டைகாரன்
புதூரிலிருக்கும்

## மகா-ஈ-ஈ-ஸ்ரீ செல்லக்குமார கவிராயரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எத்திக்குஞ் சொலவரிமேல் வேங்கடராயன் பகர்ந்த
வெழுத்துக் கோவை
இத்திக்குஞ் சர்க்கரையாஞ் செந்தேனுந் தீங்கரும்பாந்
தெளிந்த ஞான
முத்திக்குங் காரணமாந் தெள்ளமிர்தாம் வேதாந்த
முடிவா மட்ட
சித்திக்கு முதலெழுத்தாஞ் செந்தமிழுக் கிலக்கணமாஞ்
செகத்துளோரே.

---

ஷையார் குமாரர் மகா-ஸ்ரீ

## சரவணப்பெருமாள் செட்டியாரவர்க ளியற்றியது.

---

சக்கரவ ரிசையரக்க ரொக்கரனே யடர்சமரிற் றகர்த்தவாடற்
சக்கரவ ரிசரகமொய்த் தபைந்துளபச் சிகழிகையான் முர்க்கியத்வ
சக்கரவ ரிசையகிகர் களபபுயத் திருமான்மேற் சான்றோர்கண்மெச்
சக்கரவ ரிசையமுதிற் சொற்றனன் வேங்கடராஜ தமிழ்வல்லோனே.

கோயமுத்தூரிலிருக்கும் மகா–ா–ா–ஸ்ரீ
சாமக்குளம், வெங்கடரமண தாசரவர்களாலியற்றப்பட்ட
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மருக்கமழு மந்தாரை மாவருக்கை யரம்பைமுதல் வளம்பெற்றோங்கு
தருக்கணிறையுமேலைமா நகரிதனிற் றமிழ்வளர்க்குந்தன்மையுள்ளோ
ணுருக்கமுள பேரன்பாற் றிருமான்மே லண்பரெலா முவந்து போற்ற
வருக்கமுறு கோவையுமொன் றுரைத்தனன் வேங்கடராஜ மதிவல்
லோனே.

உடுமலைப்பேட்டையிலிருக்கும் மகா–ா–ா–ஸ்ரீ திண்டுக்கல்
சுப்பிரமணிய அய்யரவர்களாலியற்றப்பட்ட
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முகிலெனவொண் சிகியெதிர்கொண் டெனகலந் திகழ்திருவின்
முருகால் வெட்குஞ்
சுகவடிவெம் பரமுகுந்த னகமகிழும் பத்திபுரி
சுகுணனெங்கும்
புகழ்பெறுவெங் கடராய னெடுத்த வருக்கக் கோவைப்
புதையன் மண்ணிற்
சகலருங்கைக் கொள்ளுமழி வற்றவருட் செல்வமெனத்
தடையேதம்மா.!

உடுமலைப்பேட்டைத் தாலூக்கா பூோடிபட்டியிலிருக்கும் மகா - ஸ்ரீ
நார்முத்துசாமி என்று பெயர் வழங்கும்
நாராயணசாமி நாயக்க ரவர்களாலியற்றப்பட்ட
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்,

கொழுத்துவரி சிலைமதன்ப கழிக்கிலக்காய்ப் புவிமயக்கிற்
குன்று வோரை
விழுத்துவரி தழிவனசச் செழுமலர்மின் கெழுமரும
விபுதர் கோவை
வழுத்துவரி லன்புபழுத் தினிதுதொழ விழுத்துமுத்தி
வழி வழங்கு
மெழுத்துவரி சையிற்கவிவேங் கடராய னுவல்கோவை
யியல்பு மாதோ



ஸ்ரீ

இராமஜெயம்.

திருமால் திருச்சந்நிதி முறையீட்டு

# வருக்கக் கோவை.

காப்பு.

## நேரிசை வெண்பா.

பூங்கமலக் கண்மாலுன் பொன்னடியைப் போற்றிமகிழ்ந்
தோங்கமல வாழ்வுபெற வுற்பவநோய்—நீங்க
வெழுத்தொழுங்காப் பாடலினைத் தேற்குமுன்னை ரன்பாய்
குழுத்தொழுங்காப் பாகவந்தாட் கொள்.

## தொண்டர்கடுதி.

பன்னிருக் காதி பழமறையும் போற்றருந்தா
ளென்னிருத யத்திருத்து மீசனன்பர்—பன்னிருசீ
ராழ்வா ரடியா ரடியா ரடியவரைத்
தாழ்வார் சரணென் றலை.

## திருமகடுதி.

மாவிலக்கு மித்தாயெ ன்மந்தமென்ன வெங்கவலை
நீவிலக்கு வாயென்றுன் நீண்மணத்தாட்—பூவிலக்கு
வைத்து வணங்க மதியளித்த நின்கருணை
மெய்த்ததென்க் காக்க விரைந்து.

## நூல்.

### கட்டளைக்கலித்துறை

அணிவைத்த நீல மணிவண்ண கண்ணவென் னன்னருக்கு
மணிவைத்த காதன்மனாள குணாள வளர் பிறவிப்
பிணிவைத்த கன்மந் துடைத்தரு ளென்னும் பிரார்த்தனைக்கே
துணிவைத் தருஞ்சித்தர் தாட்டுசி யென்சிரஞ் சூட்டணியே.

ஆயா மணப்பைந்து ழாயா வசோதை யருமைத்திருச்
சேயா வெனதர சேயா தவர்தஞ் சிகாமணியே
மாயா மயக்குற்று மாயா நின்றேனெனை வன்பவள
வாயா லழைத்திடு வாயா வொரேவன் மகிழ்ந்துய்யவே. (2)

இல்லாமை யான்மன மேங்காமை பொன்பெற் றிருப்பவர்கீழ்ச்
செல்லாமை தீயசெய் யாமைநின் றுட்டுதி செய்திலர்முன்
னில்லாமை மாதரை நண்ணாமை தந்தன்பு நேர்ந்தருள்வாய்
வல்லாமை யாகிக் கடல்வரை தாங்கிய மாயவனே. (3)

ஈடேற்று வாயென் றுனைநம்பி னேனிப் புவிமயக்கி
னூடேற்று வார்துய ருள்ளேற்று வார்வினைக் கோர்பெருஞ்சும்
மாடேற்று வார்பின்னை மாய்ந்துழி வன்னி வளர்த்திச்சுடு
காடேற்று வாரன்றி வீடேற்று வாரில்லை கார்வண்ணனே. (4)

உவமான மற்ற வருளுடை யாய்பொன் னுடையுடையாய்
தவமான தாமரைத் தாளுடை யாய்வனத் தாருடையாய்
துவமான நெஞ்சன்பர் சூழ்வுடை யாய்வெந் துயர்கொணடைச்
சவமான நாயெனை யுங்காத் தருள்செய் தவறொழித்தே. (5)

ஊழ்வினை யோநின் னருட்கய லாகி யுலகமயற்
சூழ்வினை யேற்று வருந்துற லையவச் சூதறியேன்
றாழ்வினை யோடித் துதிசெய்து முத்தியின் சாதனமாம்
வாழ்வினை நண்ணா வருதில்லை யிம்மன மாயவனே. (6

எழுபவ னேயற் றெழுப வனேவினை யிற்பட்டுநொ
தழுபவனேயென வேங்குகின்றேனிவ் வழிமனத்தால்
விழுபவ னோரிவாண்மிசை வீழ்ந்தென வேதையுற்றேன்
றொழுபவ னைகை யுறத்தூண் பிளந்தெதிர் தோன்றரியே. (7)

ஏற்றமிட் டாழிபிறைத்திட லாங்கங்கை யென்னுமந்த
வாற்றின் மணலைக் கயிறுத் திரித்திட லாம் விசும்பைப்
போற்றவில் லாகவளைத்திட லாம்வினை பூண்மனத்தை
மாற்றுத லேது முடியாத காரிய மால்வண்ணனே. (8)

ஐயா வரங்கப் பிரானே முறையிட் டலறியடுஞ்
செய்யாது காத்தரு ளென்றேதி யுந்தொடர் தீவினையைக்
கொய்யாது தண்ணளி கூராது வாட்டுங் கொடுமையினுல்
வையாது வைதிருப் பேனதி லோவன்மம் வைத்தனையே. (9)

ஒருமையில் லாமலங் தோபற் பலவிட னேடித்திரிந்
தெருமையின்மேன் மழை பெய்தன்னவென்ன வியம்பினு நீள்
கருமை மனஞ்சற்று மஞ்சாமை கண்டு கலங்குமிச்சே
யருமை பெற்றூரறியாவிடி லாரறிவா ரையனே. (10)

ஓட்டங்கொள் பாத ரசம்போனு நெஞ்ச முழிதரலால்
வாட்டங்கொ ளேழை முகங் கண்டு போற்றன் மதலை மொழி
யாட்டங்கொள்வாயென தய்யா வசட்டை செய்யற்க வெட்டு
நாட்டங்கொள்வானைத் தருந்தாமரை மலர் நாபியனே. (11)

ஒளவியங்கொண்டு பெருமூச் செறிந் தயலாக்கத்தினூற்
கௌவைகொ ளிம்மன நின்னன்பர் சீர்த்தி கருதி நொந்தால்
யௌவனமாகு மதற்கோ முன்செய்தவமியாது மில்லேன்
பௌவநிறத் துப்பிரானே நின் சித்தமென் பாக்கியமே. (12)

கல்வாய் மனத்துக் கயவரைப் பாடிக் கரம் விரித்துப்
பல்வாய் திறந்து பலப்பல வோதிப் பயனற்று நீர்ச்
செல்வாய் நிறத்துப்பிரானே நினைத்துதி செய்தல் விட்டு
நல் வாய்மை கெட்டவிந் நாயேனெந் நாளுன்னை நண்ணுவதே.(13

காயா மலர்நிறக் காயா விண்ணோர்கள் கருது நற்ச
காயா வருள்பெரு காயா யடியரைக் காக்கு மன
காயா தவாவினிக் காயாதுவந்து கருணை யளிக்
காயா விக் காஞ்சிரங் காயாகி நின்ற கடையனுக்கே. (14)

கிடுகிடென் றண்ட மதிர வருநமன் கிட்டினனேல்
நடுநடுங்கிக் கண்புனல்சோர வாமென நைகின்ற நான்
விடுவிடென்றிந்தப் பொலா மாயையைத் தட்டிவிட் டையனே
குடுகுடென் றோடிவந் துன்பா லடைக்கலங் கொள்வதென்றே.15

நீரக்கடற் பள்ளி கொண்டவனே யருட் கேசவனே
தீரக்கடந்தவன்போ லிந்தமூடன் றிரிந்து விவ
காரக் கருநெறிப்போந் தகங்கொண்டதைக் கண்டு வெகு
தூரத் தொலையி லொளித்தனையோ பழி சூழுமென்றே. (16)

குணமறியேன் வினைக்கூ றறியே னினைக் கூறு தமிழ்
மணமறியேன் திருநாதா மெய்யன்பர் மகிழ்வுறுவங்
கணமறியேன் வெறியேன் சிறியேனின் கழல் வணங்கும்
வணமறியே னெற்கு மானிட மேதுக்கு வாய்த்ததுவே. (17)

கூசாதுநின் றிருக்கோயிலை நாடுங் குண நிறைந்த
மாசாது சங்கத்தொடு சென்று தாழ்ந்து வணங்கியுனை
யீசா துழாயணி மார்பா வெனச்சொலி யேத்துதற்குங்
காசா துட்டாவிந்த நெஞ்சேன் கலங்குது கார் வண்ணனே. (18)

கெட்டகுடியே கெடுமதற் கேற்கெனக் கெட்டுழலுந்
துட்டமனம் வசப்பட்டிருந்துஞ் சட்டி சுட்டது கை
விட்டதுபோல விமலாநின் றண்ணளி வேண்டி முறை
யிட்டதுக்கேதும் விடை யிலதால் வெளியேறிட்டதே. (19)

கேலிக்கிடமெனப் பாழ்மனங் கொண்டி ருக்கொழியக்
கோலிக்குயிற்றிய நன்னெறி காட்டுங் குணமதிய
மாலிக்கிரணமது காநெறித்த தொப்பா மெனை நீ
பாலித்திடாதுகை விட்டாலையா வன்பர்பங் கன்பனே. (20)

கைதவங் கொண்ட கடையேனின் னுமங் கருதிடமுன்
செய்தவமென்கொ லதன் பயனாகத் திருவருளு
மெய்தவந்தாலிந்த வெம்மாயை செய்யுமிட ரனைத்துங்
கொய்தவன்றான் பத்தி கொண்டவன்று னெந்தை கோவிந்தனே.(

கொன்னே கழிந்தது வாணாண் முழுதுங் கொடு மறலி
முன்னேவிழிக்கும் படிநேருமோ வினை முற்றிடுமோ
வென்னேயென முறையிட்டேங்கு மேழை யெனக்கருள்செய்
பொன்னே மரகதவெற்பே மெய்வேதப் புதைபொருளே. (22)

கோடாதுகோடி பிறவிகொண் டெய்த்துக் குறை பகர்ந்து
நாடாநின்றண் ணளிதேடா நின்றேனெனை நண்ணியினி
நீடாதுமாயை நெருங்காது துன்பநிதந் துதித்து
வாடாவெனச் சொல்லுதென்றோ குன்றக் கருமாணிக்கமே. (23)

கௌரவணப்பய வாழியின் மேவு கருமுகிலே
பௌரவர் பாற்சந்து பஞ்சவர்க்காச்சென்ற பட்சத்தனே
சௌரவப்பைந் துளவம்புனைவோ யித்தமிய னென்றும
ரௌரவமாதி நரகம் புகாவணம் ரட்சிப்பையே. (24)

சதிக்கின்ற தீக்குணா நெஞ்சது கெஞ்சிடத் தாட்கொடு நீ
மிதிக்கின்ற காலம்வருமே லப்போதும் விரைமலரோன்
விதிக்கின்ற வாக்கினைக் குள்ளாகிவாட விதியுளதோ
கதிக்கின்ற தன்னாளித் தாயினுஞ்சான்ற கருணையனே. (25)

சாந்தனையும் பல்விசாரந்தருஞ் சமுசாரத்திலுள்
வேந்தனையன் குறைநீங்க நின்சித விரைமலர்த்தா
ளீந்தனையேற் பிழைத்தே னரசே யெழில்லேய்ந்த ரதிக்
காந்தனைப் போதனையீன்றவனே யருட் கண்ணவனே. (26)

சிந்தாகுலமுற் றிருந்துளம் வாடித்திரிந்து நொந்து
நந்தா நின்றேனெற்கு நல்வழிகாட்டி நவை பொறுத்து
வந்தாதரியரி மாதவவென்று வழுத்தமதி
தந்தாயந்நன்றி மறவேனெந்தாயிது சத்தியமே. (27)

சீமாட்டி செல்வத் திருமங்கை கேள்வவித் தியகுணக்
காமாட்டி நெஞ்சு தொழுவினிற் றப்பிக் கழுவதனி
லேமாட்டிக் கொள்வதுபோலப் பொன்னாசையிலெய்த்துப்பின்னர்
பூமாட்டிய குழன்மின்னார்கள் காதற் பொருந்தியதே. (28)

சுரும்பாடுவாசத் துழாய்க்காடுபூத் தொளிர்தோருடையா
யிரும்பாடு பம்பரமென்னுமிந் நெஞ்சமிடையனுக்கு
விரும்பாடுதான் கொழுத்திட்டா விலாபமென விளங்கிற்
பெரும்பாடு செய்திடும் வெம்மாயை யானந்தம் பேசரிதே. (29)

சூற்கொண்ட கொண்டலே நேர்மேனியா பவஞ்சூழ்கரும
மேற்கொண்டபேதை யென்மேற்கொண்ட நின்சினமிஞ்சுபுண்ணிற்
கோற்கொண் டசைப்பதுபோ லன்பு காட்டினன் கோவினது
தோற்கொண்டவெம்புலி வஞ்சகவேடந் துலங்கநின்றே. (30)

செல்லாத வோர்பணஞ் செல்லக்கடைதொறுஞ் செல்லினுங்க
ணில்லாருங் கொள்ளுறுவரோ நீறிமார்க்கத்தினி லிறங்கிச்
செல்லாவிந்நெஞ்சை நின்பாற் செல்லச்செய்யுந் திறனுளதோ
நல்லார்துதிப் பொருளுக்கன்பு விற்கின்ற நாயகனே. (31)

சேமமுறச் சிற்றறிவால் வெம்மாயையிற் சேர்மயக்கிற்
பாமரனு னுன்பதந்தேடி நிற்கின்ற பான்மை நடுச்
சாமவிருளிற் சிறுவிளக்காற் பொன்றனை யெடுக்கக்
காமுறலொக்குமெனினுந் துயைபுரி கார்வண்ணனே. (32)

ஐயமெடுத்துமழை தடுத்தண்டர்தமைப் புரந்த
வையவின்றே யெனையாட்கொள் வெம்மாயைக் ககப்பட்டு நான்
வையமயலின் மயங்குகின்றேன் சிறுவன் கயிற்றாற்
செய்யசிறைகொள் பொன்னம்பூச்சி யாடுகை செப்பிடவே. (33)

சொக்குப்பொடி யெவர்தந்தார் கண்கட்டுத் தொழிலையெவர்
பக்குவமாகப் படிப்பித்தனர் பெரும்பாலு முண்மை
நிற்குமெனைத் தன்வசமாக்கிப் பொய்யை நிசப்படுத்தி
யிக்குரக்குள்ளமெவ்வாறோ மயக்கியதென் னரசே. (34)

சோகத்திலேவளர் மோகத்திலேயெழிற் றோகையர்சம்
போகத்திலே மிடைரோகத்திலே பழிபூண்டமனோ
வேகத்திலே யவிவேகத்திலே துயர்மிஞ்சுமநு
போகத்திலே கண்டுகொண்டே னுன்னன்பு புயல்வண்ணனே. (35)

சௌதாயிக மலர்த்தாளர் வடியர்தமக்கருளு
மௌதாரியமுடையானே யிடைச்சிய ராடைகளை
வௌதாவிலாப் புகழ்க்கண்ண யிவ்வையக வாழ்க்கையிலே
தௌதாமதக் குணத்தேனுய்ய நலகுக சத்துவமே. (36)

நண்டையுங் கண்டையுஞ் செண்டையும் வண்டையு நற்கதலித்
தண்டையுநேர் முழந்தாள் வசனங்கொங்கை தாரைதுடை
கொண்ட நல்லாயென முந்துனர் நாக்கள்பல் கூறுபடத்
துண்டஞ்செய்தாலு மந்தோ முகுந்தாவுனைச் சொல்பவன்றே.(37)

ஞாயிறு வெண்மதிபோன் றொளிர்சக்கர நத்துடையாய்
ஆயிரநாமத்தெனையா மடையரடி வணங்கி
வாயிரங்கிக் கெஞ்சி வாளாவிப் பேதை வருந்துவது
நாயினுங்கீழ்ப்பட்ட தீயோர்தமக்கு நகைதருமே. (38)

ஞெலுவனறநுமவ லுண்டருள்கூர்ந் தவநின்றனை யென்
சொலுவன் சொலச்சொல வானந்தமே யெனிற் சோபிதநின்
கொலுவன்பர் மேன்மைபெரிது பெரிதென் குறையையெந்நாள்
வெலுவனவ் வன்பரொடு கூடிநின்று விழைவுகொண்டே. (39)

ஞொள்கவைத்தாய் மனநோவ வைத்தாய் பின்னைநோக்கி யருட்
குள்கவைத்தாய் மெய்யுணர வைத்தாயிவ் வுலகின்சுக
மெள்கவைத்தாயினிப் பூமனு மேமனு மென்னைக் கண்டு
வெள்கவைத்தா யெனக்கன்புவைத்தாதரி மெய்த்தெய்வமே. (40)

தண்ணிட்ட நின்மலர்த் தாளிட்டவேலை தலையிற்செய்து
மண்ணிட்டம் பெண்ணிட்டம் பொன்னிட்டம்விட்டுமகிழ்ச்சிபெறக்
கண்ணிட்டவேழை யென்கண்ணிட்ட குற்றங்களைப் பொறுத்தாள்
விண்ணிட்ட மேனிவரதா கருணையின் கடலே. (41)

தாதாவை நல்கிய தாதா தவமுகுந்தா கருணைத்
தாதாநினையல தாதாரமில்லை தயவுசெய்து
தாதாவஞ்சேலென்று தாதாசரண்டுதி தந்ததுபோ
தாதாநின் னுட் கருந்தாதா வருமந் தகைத்ததன்றே. (42)

திருமந்திரமறியே னின்பொற்சேவடி சேவித்தற்குத்
தருமந்தெரிந்தில னப்பாவப்பாவி தமியன்மிசை
வருமந்தகைத் தன்றுபெற்றுடன் மைந்தன் மடமைகண்டு
மருமந்தபிள்ளையென் றெண்ணுவனோ யச்சுதானந்தனே. (43)

தீனந்தனைக்கொண்ட சேயேனருட்சித்தியானசித்தி
யானந்தவாழ்வு புணர்ந்தன்பரோடுன் னருகடைந்து
கோனந்தனந்தனை வென்றென் றிறைஞ்சிக்கை கூப்பிநிற்பேன்
வானந்தரு மணிவண்ணா கண்ணாதிரு மாதன்பனே. (44)

துப்பென்று சொல்லிதழ் மின்னார்கள் காதற்றொடர்வுமுற்றுழந்
சப்பென்றுநீங்குவ தெந்நாளென் றெண்ணித் தளர்ந்து நொந்து
குப்பென்று தீப்பற்றி வேமனத்தேற்கருள்கூர வுன்னிற்
றப்பென்று தொண்டர்தடுப்பர்கொலோ சகநாயகனே. (45)

தூண்டாதொளிருஞ் சுடர்விளக்காமுனைத் தோத்திரித்தே
யீண்டார்வமாயென் மனத்தேயிருத்தியு மிம்மனத்து
ணீண்டார்ந்துள விருணீங்காமைக் கென்னைநியாய மன்பு
பூண்டார்தமக்கருள்கூர்ந் தாண்டுகொள்ளும் புகழ்த்தெய்வமே. (46)

தென்னங்குரும்பை முலையார் விழிக்குத் திகைத்தலைந்து
சின்னங்கொடு சுகமில்லாவிப் பூவயின் சேர்ந்தனையா
சொன்னங்கிடந்த நின்றாட் டாமரையுறச் சூழலையென்
கன்னங்கரேலென் றுளவுட் சுரும்பென்ன கன்மமிதே. (47)

தேனுக்குநேர்விழித் தேவகிமைந்தவித் தீநெஞ்சடி
யேனுக்கென்றெங்கிருந் துற்றதுவோ நிலையின்றிமட
மானுக்குக்காதன்மெய் வாழ்க்கைக்கு வாஞ்சை வகுத்ததம்மா!
மீனுக்குவா லகிக்குத்தலை காட்டும் விநோதத்திலே. (48)

தையற்சிகாமணி யெம்பெருமாட்டி சனகன்செல்வி
மையுற்ற கண்ணெதிர் மான்விழவோர்கணை வாங்கியவா
பொய்யுற்றவிப் புன்புலாலியாக்கை மெய்ப்பெயர் பூண்டுளதா
லையுற்றலைகின்ற தந்தோவென் பேதை யழிநெஞ்சமே. (49)

தொண்டர்பிரா னுன்றுணையடி போற்றித் துதிக்க வெண்ணங்
கொண்டதென்றே மகிழ்வெய்தி நின்பாற் குறைகூறுந்ததிப்
பண்டைக்குணமுற்றுப் பல்கோடிகாதற் படைத்ததிந்த
வண்டத்தன மனத்துக்கோர் மடிவுவர வில்லையே. (50)

தோலொன்று மூலமென் றோதியழைத்திடத் தோன்றியவோர்
நீலொன்றுமேனி முகிலே யெளியன்க ணோர்ந்த துயர்
மாலொன்றிரண்ட லஃதெல்லாமளித்த மனமிதுக்கு
வாலொன்றுமட்டுங் குறையுளதேன்முழு வானரமே. (51)

தெளிவைகொ ளிம்மனப் பொல்லாக் குரங்கையுன் றாட்கன்புகொண்
டொவ்விநடக்கும்படி செய்தனிற்கரிதோ கொடிய
தெவ்வரை வெல்லமுன்னுள் வானரத்திரட்சேர்த் தொருங்கு
செவ்வைப் பணிகொண்ட சிராமசந்திர தெய்வமன்னே. (52)

நச்சுத னேரடியார்பங்க னென்றுனை நான்மறையு
மெச்சுத னேகமுறையிட்டு வாடி வெதும்பி நிற்கு
மிச்சுத னேனுக்குமட்டுமுள் வஞ்சகமென்கொல் சொல்வா
யச்சுதனே சக ரட்சகனே சச்சிதானந்தனே. (53)

நாடிக்கொண்டாடி நல்லன்பர் நின்பாத நறுமலரைச்
சூடிக்கொண்டா ரின்பஞ்சூழ்ந்து கொண்டாரிந்தத் தோசியந்தோ
கூடிக்கொண்டாடிக் குலாவுபுன் கோதையர் கோலமெச்சிப்
பாடிக்கொண்டேன்வினை தேடிக்கொண்டேனருட் பாங்கவனே.( )

நிரந்தர சின்மலர்ப் பாதார விந்தத்தை னெஞ்சகத்திற்க
வரந்தர வேண்டுமென யோர்தரஞ் சொல்லுவார்க்கு மன்பு
சுரந்தர செயருள் வாயெனல் பொய்கொலென் சோதனையா
யிரந்தர முண்டிங்கடியேன் முறையிட் டிறைஞ்சியதே. (55)

நீங்காமனித்த நெருக்குந் துயரிலென் னெஞ்சினிமே
லேங்காமலாசை யெழாமற் கொடியவ னென்னும்பெயர்
வாங்காம னின்னைமறவாமலுற்பவ வல்வினைநான்
றுங்காமனிற்கத் தயைபுரிவாயித் ததியரசே. (56)

நுவலற்கரிய பரம்பொருளேயுந ளேக்கற்றவிவ்
வவலக்ஷண நெஞ்சகத்தால் வினையிலலேன் றுழன்று
கவலற்ற விர்த்தருள்வா யென்றுநின் பொற்கழனம்புமா
னவலப்படுத லழகோவுன் சித்தன் னளியதற்கே. (57)

நூல்வைக்கு நுண்ணிடையார் வைக்குநோக்கினி னைந்து நொந்து
மால்வைக்கு நெஞ்சைநின் சார்வைக்க வேண்டிவருந்துமெனை
மேல்வைக்குந் தண்ணருட் பார்வைக்குள் வைக்கின்வினையொழிந்
நீல்வைக்கு மோரெழிற் கார்வைக்குமேனி நெடியவனே. (தேன்

நெய்யுற்றதாழ்குழற் சத்தியபாமை நன்னேய மழை
மையுற்ற மேனிவரத வென்றீவினை மன்னிப்புக்கு
மெய்யுற்றநாவிற்செய் விண்ணப்பமேற்றருண் மேவிலையே
லையுற்ற பேதையரெல்லோர்க்கு மோரெளிதாய் விடுமே. (59)

நேரிட்ட பஃறுயர்காளா யிந்நெஞ்சொடு கித்தகித்தம்
போரிட்டிளைக்குந் தமியேனிலைமை புகல்வதென்னின்
சீரிட்ட தண்ணளி காணுததன்றிச் சிரமமெய்த
ஆரிட்டசாபங்கொ லோவறியேனச்சுதா னந்தனே. (60)

ஊநவானுட லெடுத்தேனன்றி யின்புற்ற நாளில்லையென்
செய்வானிவனென்று நீநினைத்தாலிச் சிறுமையுண்டோ
எய்வானிருக்கப் பகழியைநோதலி லேழை நெஞ்சைத்
தெய்வானுகூலமென் றெண்ணுது நொந்தனன் சிதரனே. (61)

ஒநாடியேனுந்துன்பு சகியேன் புதுமை நுவற்ற கிற்கிப்
படியேனுண்டாயது பாராமுகம்வினைப் பாலுழலும்
அடியேனுக்குன்பொனடி யரிதாமெனி னன்பர்திரு
வடியேனுந் தந்தரு ளாழியனே யருளாழியனே. (62)

ஒநாதலுறுந் தநிமண்வாழ்க்கை யெள்ளிப் பின்னோக்கியதிற்
காதலடையு மென்பொல்லாத நெஞ்சங்கடுங் கருப்ப
வேதனைவேளை புணர்ச்சியையேசி வெறுத்தப்புறம்
நாதனைநாடு மொருநாரி போலுமென்னையகனே. (63)

ஒநளவற்பழத்துக் கொருகூடை மாணிக்க நன்மணியோ
ரளவைக்கருளிய கோபாலகிர்ஷ்ண வென்னய்ய நெடுங்
கௌவைக்கிடந்தருங் காமாதிகொண்டு கருமத்துழ
லெவ்வக்கிரமனமேற்கோபி நானிற்கெதிரியன்றே. (64)

பண்பாயுனது பதத்துதி பாடிப் பரிந்திதயத்
தெண்பா வனம்பெற் றுயவெளியேன் மிசையின்கருணைக்
கண்பா ரமுதகுணக் கடலே நற்கமலை மகிழ்
நண்பாவனந்த சயனவம் போருக நாபியனே. (65)

பாவாணர் நண்ணிமகிழவுமி யாவரும் பத்தனென்று
மேவாவியந்து புகழவு நெஞ்சம் விழைந்து பொல்லா
நாவா னின்றுனை நவிற்றுமென்பாவையு நாடுவையோ
தேவாதி தேவமெய்த் தொண்டர்சொ லேறுஞ் சிரவணனே. (66)

பின்னிட்ட வார்சடைப் பெண்ணார்மயக்குப் பிடித்திழுக்கப்
பின்னிட்டதிம்மன நின்னிட்ட மெய்திடப் பெட்புடனே
முன்னிட்டவேழை யடியேன்முயற்சி முடிதலென்றோ
முன்னிட்டவேத முதல்வாவருட் கண் முளரியனே. (67)

பீதாம்பராச கநாதாவுந்தன் செல்வப் பிள்ளைகளாஞ்
சீதாம்புசாசனன் பூவாளி செய்கின்ற செய்கையெல்லாந்
தீதாம்புகலவொணாதா வவர்க்குச் சிறிது புவி
மீதாம்பலைமுன்புக்கு மாளாகவெற்செய்து விட்டனரே. (68)

புரையேற்ற பொன்வரை மாதர்முலைவரை பொங்குகடற்
றரையேற்ற வூற்ற மனக்கப்ப லாற்சன்ம சாகரத்தை
உரையேற்ற தண்ணளியாய் தாண்டநண்ணியுள் ளாழுகின்றேன்
கரையேற்றவேண்டு முனைவிடில் வேறுகதி யில்லையே. (69)

நீண்ட விடமுடிப்பாம்பின் செருக்கறப் பூருவத்திற்
றாண்டவமிட்டதுபோ லின்னுமோர்தரந் தானடிக்க
வேண்டுமென்றுலந்தப் பாம்புக்குமேற்பட்ட வெங்குணத்தீ
மூண்டவென்னெஞ்சுண்டு தாண்டவஞ்செய்ககொண்மூவண்ணனே

பெருமாமருப் பொசித்தா யொன்றுகே ளிப்பெரும் புவியிற்
கருமாமலைக்குட் பெரிதாந்திரு வெங்கடமென்று நீ
யொருமா லடைந்தனையக் கல்லகத்தினு மோங்கியென்கண்
லருமா மனமலை மேலாங் குடிகொள்ள வாஞ்சிப்பையே. (71)

பேருக்குமட்டுங் கணவனிடத்தன்பு பெற்றுப் பின்ன
ரூருக்குளே திரியும் விபசாரிக் குறுந்தன்மைபோற்
காருக்குநேர் மணிவண்ணாநின் றட்டொண்டுகாட்டி யிந்தப்
பாருக்குளாசை வைத்தேனுக் கெந்நாள்கொல் பழியறலே. (72)

பையாருமாயிரம் பையாதி சேடனிற் பள்ளிகொள்வோய்
மெய்யாகருங்கொண்டன் மெய்யாவற் கோதண்டவிற்கொண்டசெங்
கையா மெய்யன்பரிற் கையாதளிக்குங் கருணைவள்ளா
லையாவெனக் கருளையா நின்றூய வடியிணையே. (73)

பொருப்பைப் பெயர்த்து மருப்பையொசித்தெழிற் பொன்னின்முலை
யுருப்புச் செருக்கு விருத்திசெய்தோ யிங்குடுக்கிடையார்
கருப்புக்கு நைந்த கடையேற்கு னன்பர் கழற்கன்பர்காற்
செருப்புக் கடிமைசெய லேனும் வாய்த்திடச் செய்தருளே. (74)

போசனத்துக்கும் வழியற்ற வேழை புரவலன் சிங்
காசனத்துக்குப் பெருங் காதலுற்றென் கொலன்பற்றவித்
தாசனத்துக்கு மிஞ்சிச்செலு நெஞ்சகத்தாற் சன்மவி
மோசனத்துக்கு நினைத்தாவதென்னை யெம்முன்னவனே. (75)

பௌவத்தினிற் பள்ளிகொண்டாய் குரக்குப் படையைக்கொண்டு
பௌவத்தினை யடைத்தா யமுதண்டர்க்குப் பாலித்திடப்
பௌவத்தினைக் கடைந்தாய் தண்ணளியு மெய்ப்பாங்கு நெடும்
பௌவத்தினை யொக்க நின்று யெந்தாயன்பர் பக்கத்தனே. (76)

மக்களிக்கின்ற மனத்தேனிவ் வையக வாழ்க்கைச் சிக்குப்
பிக்களிக்கின்ற வினைநீங்கி நின்கழற் பெற்றுத்துதித்
தெக்களிக்கின்ற தினமெதுவோ வன்பி னரிதயம்
புக்களிக்கின்ற சுகவச்சு தாநந்த பூரணனே. (77)

மானத்தின்மேற்கண்ணு மாப்பிள்ளைமீது மனமுமென்ன
ஞானத்தினேக்கமும் ஞாலத்திலேக்கமு நாட்டியந்தோ
ஈனத்திலே திரிகின்ற பொல்லாத விதயத் தன்யான்
மோனத்தியானத்தி னிற்பரிதே யெங்கொண் மூவண்ணனே. (78)

மிகுதியதாகி நெருக்கும்பொலாத மிடிவினைக்கிற்
றிகுதிகென் றுள்ளமெரிகின்ற தோடுனைச் சேவித்தற்குத்
தகுதியற்றேனென்ற வெண்ணமுஞ் சூழ்ந்து தகிக்கின்றதே
நகுதிருச்சக்கரனே யென்செய்கேனருணால்குதியே. (79)

மீக்குவம் விழ வுரலிழுத்தோயிங்கு வீண்பொழுது
போக்குவதென்னிப் புலம்பாநின்றேன் றுயர்போக்கியரு
ளாக்குவைத்தாண்டு கொடஞ்சமென்றண்டுவர் நோவனைத்தும்
நீக்குவனென்று முன்னோதிய வாக்குநிலை நிற்கவே. (80)

முலையடித்துத் துவளுஞ் சிற்றிடைச்சியர் மூழ்கிடம்போய்க்
கலையெடுத்துப்பல லீலைசெய்தோ யடர்கார் முகத்தின்
மலையெடுத்துப் பொதுவர்ப் புரந்தோய் வெவ்வழியிலின்னுந்
தலையெடுத்துத் திரியாம லென்னெஞ்சைத் தடுத்தருளே. (81)

மூங்கிற் பொரும்புயப் பாஞ்சாலிகூவி முறையிட்டநா
ளோங்கிக் குவியுடைதந் தருள்கூர்ந்தவ வுனனடிக்கு
வீங்கியென வடியேன் மயலுற்று மெலிவு பெற்றிங்
கேங்கித் திரியவிடுத்தாயிதுவு மிரட்சித்ததே. (82)

மெய்த்தவனே முல்லைமாக்களி னிஃதெறுமேவி வெண்ணெய்
துய்த்தவனேயருட் சுந்தரனேவெஞ் சொறி சிரங்கைப்
பியத்தவன்றன்சுகம் போற்றுன்பை யின்பெனப்பேணியடைந்
தெய்த்தவனுமெனைக் காக்கினின்சீர்க் குண்டிருங் கணமே. (83)

மேல்வார்த்தடாரித் தெழுங்கொங்கை மங்கையர் வெங்கடின
மால்வார்த்த பொய்மை வளம்வார்த்த மாயையில் வந்தெழுந்து
நூல்வார்த்தை கேட்குகில்லாப் பாழுநெஞ்சினை நூறியென்று
பால்வார்த்து மூழ்கியிருப்பேன். கழைக்குழற் பண்ணவனே. (84)

மைஞ்ஞாகந் தாங்கெலி வாழ்ந்தெனத் துன்பின் மடிதலின்றிச்
செய்ஞ்ஞாகச் சேட்டைமடநெஞ்சென் சொல்லிற்றிருந்துறுமோ
பைஞ்ஞாகமேற்கண் டுயில்வோய் கராவசப் பட்டிளைத்த
கைஞ்ஞாகங் காத்தவனே யெனைக்காக்குங் கடனுனதே. (85)

மொட்டைத்தலைக்கு மலரென்கொல் வீட்டுமுற்றந் துடைக்குங்
கட்டைக்குப்பட்டுக் கயிறென்கொ னின்னைக் கருதித்தொழா
மட்டிக்குமானிட மென்கொல் கலைதெரி வண்மை யென்கொல்
கட்டிக்கரும்பி னடிப்பக்கமே யன்பர்கட் பக்கமே. (86)

மோகாதி வெங்குணத்தீ யென்றுயர முகங்கண்டவ
ரேகாதி தென்னை பவமென்று நொந்துளிரங்குகின்றார்
ஆகாதினையளவேனு மிரங்கினை யல்லைநன்கோ
மாகாதி செய்மகங்காத்தவ நின்னருள் வள்ளன்மைக்கே. (87)

மௌவற்குழற் சததியபாமை காதன்மணாள வென்பைக்
கௌவிக்கறண்டு சுணங்கனின் மாதர்கலவிகொண்டு
தௌவித்திரிந்து நின்றுணை மறந்தார்க டமக்குமுன்னர்
கௌவைக்கிடமென நிற்காதிருக்கக் கருணைசெய்யே. (88)

யதிகட் குமாதண்டகவனஞ் சென்றப யந்தந்தவா
விதிகட் டளைப்படி நிற்பணி செய்யவு மேவியன்பாய்த்
துதிகட் டுரைக்கவிசாற்றவுஞ் சூழ்ந்துபல் தொண்டர்நன்கு
மதிகட்டியந்தரு மார்வங்கொலென்னை மறப்பதுவே. (89)

யாசித்தரங்க நின்றாள் வேண்டுமென் கட்டயாளத்தொடு
நிசித்தம்வைத் தருளாவிடிற் கைகளை நீட்டிமனங்
கூசித்துணிமணி யேற்குநர்பா லருள்கூர்வ தில்லைத்
தோசிப்பதர்களை நானேசினது சுத்தப் பிழையே. (90)

யுதிட்டிரன்றம்பி விசையன் வலவவை யோசற்றுமெ
னதிட்டப்படி நடப்பான் வல்வினை விட்டதல்லவென்று
ரதிட்டமெனச்சொல நீயுமிரங்கினை யன்றென் செய்வேன்
சுதிட்டி வைத்தாட்கொளற் றேற்படு மெனறிட்டிதொண்டருக்கே.

யூதவுருக்கொடு வேதாவை யேய்த்தவ யூகமில்லாப்
பாதகப் பிள்ளையின்மீதும் பெற்றூட்கன்பு பற்றுமென்பர்
ஆதலினலெனைச் சேயென்றிகழ்ச்சி செய்யாமலுந்தன்
தீதற்றசே யருட் சேயென்று கொண்டருள் செய்குகவே. (92)

யோசியஞ் சொல்லுவரை நத்தி யேயுத்தி யோகத்திற்குங்
காசியல் பிள்ளைக்கு மாயுட்கும் வேண்டுவர்கள் முன்னநான்
தேசிய னின்னடிசேர் நாளைப்பார்த்துரை செய்கவெனி
லோசியஞ் செய்குவர் நீயே யுறுதிசொ லச்சுதனே (93)

பௌவனமாதர் கலவி வியந்து சொல்யாப்புளதேந்
செவ்வையுறப் பகரென்றே பலதரம் செப்புவர்கார்ச்
செவ்வி சிறந்தவ கின்றூட்டுதிக்குச் செவி குவியார்
வெவ்விழிமுன் னென்னையந்தோ விருத்திக்கைவிட்ட தென்னே.(

வருமாது வந்தனிலிக்நெஞ்ச நான்செய்த வன்பிழைத
விருமாதுவந்த வினையருமாவென வெம்புகின்றே
னொருமாது வந்ததும் புந்தாமரைத்தவி சோங்குகின்ற
திருமாது வந்தணை மார்பா வஞ்சேலெனச் செப்புகவே. (95)

வாதண்டக வனத்தாரிடம் பேசி மயங்கி கின்றூட்
போதண்டக வனந்தாதரிற் சேர்சுகம் போக்கி நின்றேற்
காதண்டக வனத்தாந் தவத்தோர்க்கன்பு காட்டியமா
கோதண்டக வனத்தாயினு நீளநட் கொண்டவனே. (96)

விளவினைக் கன்றினைக்கொண் டெய்தமாயவ வேரிகெழுத்
துளவினைத் தாங்கியதோளா சுருதிக்குந் தோற்றருநின்
களவினைக் காணத்திறனுளனோ திருக்காட்சி தந்தெற்
குளவினை நீக்கு முளவினைக்காட்டி யுவந்தருளே. (97)

வீராமச்சந்திரனாழிக்கிறைவன் மிசைச் சினந்தோய்
சீராமச்சந்திர நாதாநின் பொன்னடி சிந்தித்தன்பு
கூராமச்சந்திரதத்தென் றலான்விதி கூற்றிவர்தம்
பேராமச்சந்திர மெய்தாவகை செய்க பேரருளே. (98)

வெணிலாவணிய வலம்புரியா சுகவேய்ங் குழலா
மணிலாவணிய திருமேனியா திருமாது நண்பா
எணிலாவணியதை மேய்த்தோய் விளவிலெறிந்த கன்றுக்
குணிலாவணியல் வனந்தா யமுத குணக்கடலே. (99)

வேலாவலையமொ ரேழுக்கு மேற்படும் வேய்ப்புயத்தார்
மேலாவலையடை யிம்மனத்துக்கம் விடாதெனவெண்
பாலாவலைய நிவர்த்திசெய் தாதரி பன்னுமறை
மூலாவலைய வைக்காதே யருளடி முண்டகமே. (100)

வையஞ் சுமந்த மணிப்பணப்பாயல வாரிசப்பொன்
வையஞ் சுமந்தனிலுற்றுண் மருவிய மார்ப கடன்
மையஞ் சுமந்தரந் தாங்கியநாத மழைக்கருக்கு
மையஞ் சுமந்தச்சரீரா விறப்பற்ற மாதவனே. (101)

வெளவினையென்னுள மெற்கழியாநன் மதிதந்தனை
வெவ்வினைநீக்கிப் புரந்தனை மெய்த்தொண்டு வேட்கைகொண்டு
செவ்வைத்தமிழ்க் கவியானுனைப்போற்றிடச் செய்வித்தைநின்
செவ்விப்பதமுங் கொடுத்தெனை யாண்டுகொள் ஸ்ரீதரனே. (102)

# அரங்கச்சிலேடைவெண்பா.

## பதிகம்.

கஞ்சனநேர் கன்னவெழிற் காரிகையார் கண்காவி
லஞ்சனத்தைக்காட்டு மழகரங்கங்—கஞ்சமலர்க்
கண்ணன்குடையான கல்லால்விண் வென்றவன்சேர்
கண்ணன்குடையான கம். (1)

வஞ்சியர்க ணன்னடைகண் மாட்டுமென்பார் மொய்ம்பதிலும்
அஞ்சங்குவளைநே ரவ்வரங்கம்—தன்சரணிற்
றாழவுணர் வென்றானந் தந்தளித்தான் றிவிலங்கை
வாழவுணர் வென்றான் மனை. (2)

கச்சுமுலை யார்கணல்குல் காசில்வீட்டுக் கன்பர்கள்வாய்
நச்சரவங் காட்டுகின்ற நல்லரங்கம்—இச்சையுட
னிங்கழையா னைப்பயந்தா னேகவந்தாட் கொண்டவனோர்
செங்கழை யானைப்பயந்தான் சேர்பு. (3)

ஆழாக்கிற் காண்கதிரா யான்றோர் நெறிவழியாய்
வேளாண்மை யோங்கும் வியனரங்கம்—தாழாளர்
அச்சந் தோஷத்தை யகற்றிப் புரந்தருளும்
அச்சந் தோஷத்தை யகம். (4)

அந்தரமாங் கூந்தலுளா ரம்பகமு மன்பர் நெஞ்சும்
அந்தரங்க மென்னவரு மந்தரங்கம்—விந்தைதந்து
மாசந்தேகத்தா மருங்குறிரு மாதுவக்கு
மாசந்தேகத்தான் மனை. (5)

தத்தையின்வா யும்மடவார் தந்தமொடு நுண்ணிடையு
முத்தமிழை யோதவரு முதரங்கம்—சுந்தரநெடி
தாயவலை வாரியுண்மா லாகனண்ப னல்கவொரு
வாயவலை வாரியுண் மால் வைப்பு. (6)

பம்புபொழி லின்றலைநற் பத்தர்மனம் பாவையர்கண்
அம்பரத்தில் வைக்கு மணியரங்கம்—அன்ப
ரிடத்தன்மை யாகவையா னென்னெஞ்சை யென்றும்
மடத்தன்மை யாகவையான் வைப்பு. (7)

இத்தலத்தின் வாழ்க்கையெழி லேந்திழையார் பல்வசன
முத்திக்கு மேலென்னு மூதரங்கம்—பத்மத்
திருக்கண் மையன்மாப தேயனுமெய்ச் சீரன்
பருக்கண் மையன்மா பதி.

மாவானுலகத்தும் வண்மைதரத் தன்புறத்தும்
காவேரி பாய்ந்து நிற்பக் காணரங்கம்—மேவாவிப்
பூமாலை யான்வாழ்த்திப் போற்றினுந்தாரான் றுளவப்
பூமாலை யான்வாழ் புரம். (9)

கண்டஞ்சி நாஸ்திகர்கள் காவதனில் வண்டரசி
யுண்டென்று மோது மொருவரங்கம்—வண்டுப்
யவலம்புரியா னகஞ் சேர வென்க
ணவலம்புரியா னகம். (10)

முற்றிற்று.

இப்புத்தகம வேண்டுபவர்கள் உடுமலைப்பேட்டை புத்தக வர்த்தகம் சி. குப்புசாமி பிள்ளை யவர்களிடத்திலும் ஷை யூர் சோ. சின்னப்ப செட்டியா ரவர்களிடத்திலும கோய முத்தூர் இ. ஒன்னைய கவுடரவர்களிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் விலை அணு 4.